## முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்

## O.S.No.431/2021

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | கார்த்திகேயன் |
| தகப்பனார் / கணவர் | .. | ராதாகிருஷ்ணன் |
| வயது | .. | 45 |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | காவேரிபாக்கம் |
| தாலுக்கா | .. | நெமிலி |

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் நாள் திங்கட்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை:**

வழக்கில் வாதி தரப்பு சாட்சி 1 ஆவேன். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். 15.10.2010 தேதியில் பிரதிவாதி ரொக்கம் ரூ.1,75,000/- (Rupees One Lakh Seventy Five Thousand only) கடன் பெற்றுக்கொண்டு ரூபாய் 100.00 க்கு மாதம் 1-க்கு ரூ.1.50 (18%) வீதம் வட்டி கொடுப்பதாக சம்மதித்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்து விபரத்தில் காண்பித்துள்ள சொத்தை ஈடுகாட்டி சாட்சிகள் முன்னிலையில் 15.10.2010 தேதியில் தாவா அடமான பத்திரத்தை என் பெயருக்கு செய்யார், சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொடுத்துள்ளார். அதன் பதிவு எண்.4808/2010 ஆகும். அந்த பதிவு செய்த ஈடுகாட்டிய அடமானக் கடன் பத்திரம்

(Registered Mortgage Deed) வா.சா.ஆ.1, நான் வழக்கறிஞர் மூலம் மேற்படி கடன் தொகைய பைசல் செய்யக்கோரி கடைசியாக 13.12.2013 தேதியில் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பினை அனுப்பினேன். அதன் நகல் வா.சா.ஆ.2, பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பினை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை வா.சா.ஆ.3 ஆகும்.

**குறுக்கு விசாரணை**

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு
சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு,
சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்/- N. சுரேஷ்
**முதன்மை சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**